ஓம் சரவணஜோதியே நமோ நம

ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

19.11.2026

1. கார்த்திகை மைந்தா கந்தா போற்றி
கருணைக்கடலே வேலவா போற்றி
பார் எங்கும் ஞானிகள் கூட்டம்
படைக்க அரங்கனென் அவதாரம் தந்த

2. தந்தநல் தணிகைவேலா போற்றி போற்றி
தவராஜன் யான் உன்னை வணங்கி
சிந்தைபட பராபவ தேள் திங்களில்
செப்பிடுவேன் முதல் குருவார அருளாசியை

3. ஆசிதனை உலக மக்கள் மேம்பட
அகிலத்தில் ஞானிகள் படை பெருக
ஆசிதனை வரமாக உரைப்பேன்
அரங்கன் என் மார்க்கம் ஆறுமுகன் மார்க்கமாகும்

4. ஆகவே சன்மார்க்க வழி வந்து
ஆறுமுகா அரங்கா என போற்றி
யுகமக்கள் பிரணவக் குடிலில்
உண்மைபட சரணாகதி கண்டிட

5. கண்டிட தீவினை விலகி
கலியினில் நல்வினை அடைவர்
உண்டான என் பீடம் வணங்கி
உள்ளமதில் சைவநெறி ஏற்று

6. ஏற்றுமே ஜீவ வதை நீக்கி
எல்லா உயிரிடத்தும் தயவு காட்டும்
ஆற்றலும் மாற்றமும் தாயென வேண்டி
அரங்கன் என் பீடம் வேண்டி வர

7. வரும் மக்களின் வாழ்விலே
வந்த நோக்கம் அறிந்திடவே
தரும குணம் தயவு குணம் கூட்டி
தவராஜன் என் அன்னதான வழிகளை

8. வழிகளை தேர்வு செய்து
வருமுலகில் தருமம் வளர்க்க

தெளிவு திடம் ஞானம் பெருக
தேடியே அன்னதானம் செய்து

9. செய்து ஞானிகள் பூசைபட
சிறப்பான மாந்தராய் வாழ
மெய்ஞானம் அடைய உண்டான
மேலான சூட்சுமம் பலவுமே

10. பலவாறு வரமாக வழங்கி
பாதுகாப்பு தந்தருள் புரிவேன்
பலம் தரும் அன்னதான சேவையில்
பாருலகில் அணுகிப் பொருளுதவி செய்ய

11. செய்யவே தருமபலம் கண்டிட
சித்தர்கள் மகா சக்திகள் அருளும்
மெய்ஞானவான்களாகி சிறப்பர்
முருகப்பெருமானும் அருளும் ஞானியாவர்
அரங்கனென் குருவார அருளாசி முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி